# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 18 வெள்ளிக்கிழமை 04.10.2024 கதிர் 377







# தென்னிலங்கையில் ஏற்பட்டதைப்போல தாயகப் பகுதிகளிலும் மாற்றம் நிகழும்

## தேர்தல் திருப்புமுனையாக அமையும் என்கிறார் கஜேந்திரகுமார்

"எங்களுடைய அரசியலைப்பொறுத்த வரையில் மட்டுமின்றி தமிழ் தேசிய அரசியலைப் பொறுத்தவரையிலும் இந்தத் தேர்தல் ஒரு திருப்புமுனையாக அமையப்போகின்றது" என்று தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "தென்னிலங்கையில் ஒரு பாரிய மாற்றம் அரசியலில் ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு சமமான அல்லது அதற்கு மேலான ஒரு மாற்றம் தமிழர் தாயாகத்திலும் நிச்சயமாக நடக்கும்" என்றும் தெரிவித்தார்.

6➤




# கொழும்பில் மூவின வேட்பாளர்களையும் ஈ.பி.டி.பி. தேர்தல் களத்தில் இறக்குகிறது

## வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் டக்ளஸ் தெரிவிப்பு தெரிவிப்பு




"நடைபெறவுள்ள பொதுத் தேர்லில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், கொழும்பிலும் ஈழமக்கள் ஜனாயகக் கட்சி தமது வேட்பாளர்களை நிறுத்தி வருகின்றது" என்று தெரிவித்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் தமக்கு அமோகமாக வாக் களித்து எம்மை வெற்றிபெறச் செய்வார்கள் என்றும் நம்பிக்கை வெளியிட்டிருக் கின்றார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்தனர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, முன்னாள் அமைச்சரும் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றது.

6➤

# பொதுத்தேர்தலில் தமிழரின் அமோக ஆதரவு கிட்டுமாம்

## நம்புகின்றது அநுரவின் கட்சி

"தேசிய மக்கள் சக்தியினர் இனவாதிகள் அல்லர். எனவே, நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் அமோக ஆதரவு கிட்டும். அதன்மூலம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கை உள்ளது." - என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"எமது தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எளிமையானவர். தனது நடத்தை மூலம் அவர் அதனை உறுதிப்படுத்தி வருகின்றார். மக்கள் எமக்கு வழங்கியுள்ள பொறுப்பு உரிய வகையில் நிறைவேற்றப்படும்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு, கிழக்கில் இருந்து எமக்கு விழாத வாக்குகள் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்கும் என உறுதியாக நம்புகின்றோம். அந்த ஆதரவுடன் மூன்றி லிரண்டுப் பெரும்பான்மைப் பலம் கிட்டும் என எதிர்பார்க்கின்றோம். தேசிய மக்கள் சக்தியினர் இனவாதிகள் அல்லர். அனைவருக்கும் சம உரிமை வழங்கி, இலங்கையர்கள் என்ற நாமத்தை தேசிய மக்கள் சக்தியால்தான் காக்க முடியும் என்பது மக்களுக்கு தெரியும். எனவே, ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ், முஸ் லிம் மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வாக்கு கள் நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயம் இரட்டிப்பாகும்" என்றார்.

# முன்னாள் எம்.பி. சிவசக்தி ஆனந்தன் தேர்தலில் போட்டியிடாமல் இருக்க முடிவு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இம்முறை நாடாளுமன்றத் தேரதலில் போட்டியிடப் போவதில்லை என்று தெரிவித் துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியானது ஜனநாயகத் தேசியக் கூட்டணியில் அங்கத்துவம் வகிப்பதுடன் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இதில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறப்பினருமான சிவசக்தி ஆனந்தன் வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும், மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்துக்கு ஏற்ப இளைஞர்களுக்கும் புதியவர்களுக்கும் வழிவிடும் முகமாக இம்முறை தேர்தலில் போட்டியிடாமல்



இருப்பதற்குத் தான் தீர்மானித்துள்ளார் என்று சிவசக்தி ஆனந்தன் அறிவித்துள்ளார்.

# விகாராதிபதிக்கு எதிராக பொலிஸ் முறைப்பாடு

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.ஏ.எதிரிசிங்க வின் போதைக்கு எதிரான செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படும் தமுவை விகாராதிபதியின் செயற்பாடுகளை கண்டித்தும் அவருக்கு எதிராகவும் கண்டக்குழி விகாராதிபதி, கற்பிட்டி இந்து ஆலய குருக்கள் மற்றும் மனிதாபிமான சகோதரத்துவ நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஆகியோர் ஒன்றிணைந்து இன்று கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைபபாடுகளை பதிவு செய்துள்ளனர்.

இதன் போது கருத்து தெரிவித்த கண்டக்குழி விகாராதிபதி. 'கற்பிட்டி பிரதேசத்தில் நிலவும் போதைப் பொருள் விற்பனைக்கு எதிராக தற்போது கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.ஏ எதிரிசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் தீவிரமாக செயற்படு போதையற்ற கற்பிட்டி நகரை உருவாக்க முயற்ச்சிக்கும் இத்தருணத்தில் அவரின் இச்செயற்பாட்டிற்கு குந்தகம்விளைவிக்கும் விதமாக தமுவை விகாராதிபதியின் செயற்பாடுகள் காணப்படுகின்றது.

அந்த விகாராதிபதியிற்கு எதிரான ஆதாரங்கள் என்னிடம் உள்ளது. அதனை அண்மையாக வைத்தே இன்று அவருக்கு எதிராக கற்பிட்டி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நம்புகின்றேன் நாம் இது பற்றி தொடர்ந்து அவதானத்துடன் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சி.ஐ.டி. பணிப்பாளாராக பெண் அதிகாரி நியமனம்?



இலங்கை பொலிஸ் வரலாற்றில் முதல்தடவையாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் பதவிக்கு பெண் அதிகாரி ஒருவரை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக பணியாற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால இந்தப்பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளார்.

இலங்கைப்பொலிஸ்வரலாற்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண் அதிகாரியும் இவர் ஆவார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால, இலங்கை பொலிஸ் வரலாற்றில் சரித்திரம் படைக்கும் பெண்ணாக பார்க்கப்படுகிறார்.

இலங்கை பொலிஸ் வரலாற்றில் முதல் மூன்று பயிற்சி உதவி பொலிஸ் அத்தியட்சகர்களில் இமேஷா முத்துமாலயும் ஒருவராக உள்ளடங்குகிறார். அவர் 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி பயிற்சி உதவி பொலிஸ் அத்தியட்சகராக பணியில் சேர்ந்தார்.

அவர் 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றார்.

இவர், ருஹுணு பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல் பட்டம் பெற்றவர். திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டப்படிப்பையும் நிறைவு செய்துள்ளார். அவர் 2021ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் குற்றப் புலனாய்வுத் துறையின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

# சி.ஐ.டி. முன்னாள் பணிப்பாளர் நிதிமன்றில் இன்று ஆஜர்

புலனாய்வுப்பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன, ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பில் தற்போது உச்ச நீதிமன்றில் முன்னிலையாகியுள்ளார்

தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்காததன் மூலம் நிலந்த ஜயவர்தன அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளார் என தெரிவித்த உச்ச நீதிமன்றம், அவருக்கு 75 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறும் முன்னர் உத்தரவிட்டிருந்தது.

ஆனால் அவர் நட்டஈட்டை முழுமையாகச் செலுத்தத் தவறியதால், நீதிமன்ற உத்தரவின்படி அவருக்கு எதிராக சட்டமா அதிபர் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டைத் தாக்கல் செய்திருந்தார்.

அது தொடர்பான உண்மைகளை முன்வைக்க இன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உச்ச நீதிமன்றம் முன்னர் விடுத்த அறிவித்தலின் பிரகாரம் நிலந்த ஜயவர்தன நீதிமன்றில் முன்னிலையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் பெண்ணொருவர் கொடூரமாகக் குத்திப் கொலை

கொழும்பு, வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெக்னிக்கல் சந்திப் பகுதியில் பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்ட பெண் 32 வயது மதிக்கத்தக்கவர் எனத் தெரியவருகின்றது.

கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கும் மற்றுமொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த பெண், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை வாழைத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

## யாழ். பல்கலை அலங்கார நுழைவாயில் திறந்துவைப்பு








யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பிரதான வாயிலில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார நுழைவாயில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவால் நேற்று நுழைவாயில் திறந்து வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பல்கலைக் கழக நலச்சேவைகள் கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சர்வமத நிகழ்வுகள் கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம்பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக 1974 அக்டோபர் 06 ஆம் திகதி இலங்கையின் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன் பொன் விழா நிகழ்வுகள் கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் இடம்பெற்று வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

## தூய அரசியலை பேணும் வகையில் வேட்பாளர் தெரிவு அமைய வேண்டும்

### மார்ச் 12 இயக்கம் வலியுறுத்தல்

குற்றவியல் தவறுகளற்ற, இலஞ்ச - ஊழலற்ற மதுபானம், போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடாதவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட வேண்டும் என்று மார்ச் 12 இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

வேட்பாளர் தெரிவில் தூய்மையான அரசியலை பேணுமாறு வலியுறுத்தும் மார்ச் 12 இயக்கத்தின் செயல்பாட்டாளர்கள் 12 பேர் யாழ். நகரில் பவ்ரல் அமைப்பின் கள இணைப்பாளர் சசீஸ்காந்தை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது, எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் பற்றி இங்கு விவாதிக்கப்பட்டது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னரே, பாராளுமன்றத்தில்அச்சமயத்தில்அங்கம் வகித்த சகல அரசியல் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறு, எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்யவுள்ள சகல வேட்பாளர்களும் மார்ச் 12 இயக்கத்தின் எட்டு நியதிகளையும் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும்என்பதை பவ்ரல் அமைப்பும் ஏனைய தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் கடுமையாக வலியுறுத்துவதன் மூலம் வேட்பாளர் தெரிவில் கட்சிகளும் குழுக்களும் தூய்மையான அரசியலை முன்னெடுக்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என இங்கு தீர்மானம் நிறைவேற்றப பட்டது.

குறிப்பாக போட்டியிடவுள்ள வேட்பாளர்கள்-குற்றவியல்தவறுகளற்ற, இலஞ்ச ஊழலற்ற ஒருவராக இருத்தலுடன் மதுபானம், போதைப் பொருள் விற்பனை, விபசார விடுதி நடத்துதல் ஆகிய நடவடிக்கைகளில் சம்பந்தப்படாதவர்களாக இருக்க வேண்டும். அத்தோடு, அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எவ்வகையிலும் ஊக்கம் அளிப்பவர்களாய் ஒருபோதும் இருக்கக் கூடாது என்பது வலியுறுத்தப்பட வேண்டும்.

மேலும் அவர்கள் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பவர்களாகவோ, நாட்டுக்கு குந்தகம் விளைவித்த நிதிசார் ஒப்பந்தங்களின் பங்கு தாரராகவோ இருந்திருக்கக் கூடாது.

வேட்பாளர்கள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு முன்பு அல்லது தாக்கல் செய்த பின்னர் தாம் மார்ச் 12 இயக்கத்தின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வது பற்றி பகிரங்கமாக பொது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். இந்தத் தீர்மானங்கள் குறித்து பொதுசன ஊட கங்கள் ஊடாக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட ஆயத்தமாகும் சகல அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு அறிவிக்கவும் முடிவு செய்யப்பட்டது.






## 56 பாகிஸ்தான் கைதிகள் நாடு திரும்பினார்கள்

இலங்கையில் பல வருடங்களாக சிறைவைக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் கைதிகள் 56 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை வாடகை விமானம் மூலம் நாடு திரும்பியுள்ளனர்.

கைதிகளை திருப்பியனுப்பும் அனைத்து செலவுகளையும்அந்நாட்டின்பிரபலவர்த்தகரும், மத்திய அமைச்சருமான அப்துல் அலீம் கான் தனிப்பட்ட முறையில்ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் அப்துல் அலீம் கானின் இந்த செயலுக்கு அந்நாட்டின் மத்திய உள்துறை அமைச்சர்மொஹ்சின்நக்வி நன்றி தெரிவித்தார்.

இந்த செயல்முறைக்கு முழுவதும் ஒத்துழைத்த இலங்கை அரசாங்கத்திற்கும், உயர்ஸ்தானிகருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

பாகிஸ்தானிய பிரஜைகள் பாதுகாப்பாக நாடு திரும்புவதை உறுதி செய்வதற்காக, அமைச்சர் நக்வியின் பணிப்பின்படி, உள்துறை அமைச்சகம் கடந்த மூன்று மாதங்களாக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்து இருண்ட நாள்

## கிருசாந்தி 28 ஆண்டு நினைவேந்தல்

**என்.கே.துரைசிங்கம்**

சமாதான புறாவாக சிறகுகளை விரித்து பறந்து வந்து ஆட்சி பீடத்தை அலங்கரித்த அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க சமாதானத்துக்கான யுத்தம் என்னும் அலங்கார வார்த்தைகளில் நடத்திய கொடூரங்களுக்கு சாட்சியாக செம்மணி படுகொலைகள் படுகொலைகள் அமைந்துள்ளன.

சந்திரிகாவின் தாயார் சிறீமா பண்டாரநாயக்காவின் ஆட்சியில்1971 ஆம் ஆண்டு கதிர்காம அழகி பிறேமா வதி மன்னம்பேரி கூட்டுப்பாலியல் வல்லுறவு செய்யப் பட்டு நிர்வாணமாக்கி வீதியிலே தரதரவென இழுத்துவரப்பட்டு படுகொலை செய்யப்பட்டாள். இவரது மகள் அம்மணியின் பெயரிலும் பல தமிழ்பெண்கள் சிதைக்கப்பட்டனர். இதிலே கறைபடிந்த அத்தியாயமாக மாணவி கிரிசாந்தி மற்றும் செம்மணி கொடூரம் எழுதப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் வசமிருந்த யாழ்ப்பாண பெரு நிலப்பரப்பை விடுவிப்பதாக கூறி 1995 நடுப்பகுதியில்



படை பரிவாரங்களுடன் புகுந்தவர்கள் நடத்திய வேட்டையில் நிராயுதபாணிகள் பலர் வலிந்து கைது செய்யப்பட்டனர்.

குடாநாடு எங்கும் ராணுவ அரண்கள், கெடுபிடிகள், சுற்றிவளைப்புகள். இந்த சூழலில் தான் யாழ்ப்பாணம் செம்மணி வெளியில் 1996 செப்.7ஆம் திகதி ராணுவ வல்லூறுகளால் வழி மறிக்கப்பட்டாள் கிருசாந்தி.

யாழ்.நகரின் நுழைவாயில் யாழ்-கண்டி பிரதான வீதி, பிள்ளையார் வழிபாட்டிடம் உட்பட யாழ்.வரவேற்பு வளைவையும் கொண்ட வீதியில் பெரும் பாதுகாப்பு அரணில் நின்று வாகனங்களையும், போக்குவரத்து செய்பவர்களையும் நிறுத்தி சோதனை செய்வது படையினரின் நடவடிக்கை.இதற்காக இராணுவ பொலிஸாரும் கடமையிலிருப்பார்கள்.

யாழ்.சுண்டிக்குழி மகளிர் கல்லூரி உயர் வகுப்பு மாணவி கிருசாந்தி குமாரசாமி சம்பவ தினம் பாடசாலையிலிருந்து சீருடையில் உந்துருளியில் கைதடியிலுள்ள தமது இல்லம் திரும்பிக்கொண்டிருந்த போது செம்மணியில் வழிமறிக்கப்பட்டு சோதனைச் சாவடிக்குள் இழுத்துச்செல்லப்பட்டார்.

விசாரணை என்ற போர்வையில் இராணுவ வல ஹூறுகள் அவரை கொத்தி கிழித்து கிளறி தின்று தீர்த்தன. உயிர் பிரியும் வரை வதை தொடர்ந்தன.

கல்லூரி சென்ற மகள் வீடு திரும்பவில்லையே பீதியடைந்த கிருசாந்தி அம்மா மகளை தேடத்தொடங்கி னார். செம்மணியில் மகளை கண்டவர்கள் தெரிவித்த தகவலையறிந்து அந்த காவலரணை அடைந்து அங்கு நின்றவர்களிடம் மகளை விடுவிக்குமாறு மன்றாடினார். அப்படி ஒருவரை காணவில்லை, கைதுசெய்யவில்லை என்று கையை விரித்தனர். முழுப்பூசனியை சோற்றில் மறைப்பது போல கபட நாடகம் ஆடினர்.

கிரிசாந்தியின் தாயார் படித்தவர், பாடசாலை அதிபர். சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர். தொடர்ந்து படையின ருடன் வாதாடினார்.இதனால் அவரது வாயை பொத்தி குண்டுக்கட்டாக தூக்கி உள்ளே தள்ளினர். அவருக்கு உதவியாக வந்த மகன் மற் றும்உதவியாளரையும்உள்ளி ழுத்தனர். இந்த விவகாரம் வெளியே தெரியாமல் இருக்க மூவரையும் கொலை செய தனர்.





கிருசாந்தி அவரது தாயார் இராசம்மா டீச்சர்,சகோதரன் பிரணவன், உதவியாளர் சிதம்பரி கிருபாகரன் ஆகிய நால்வருக்கும் என்ன நடந்தது என தெரியாது உறவினர்கள் ஏங்கித்தவித்தனர். எங்கு தேடி யும் புகார் மனுக்கள் கொடுத்தும் இந்த அப்பாவிகளை கண்டடைய முடியவில்லை. மூடுமந்திரமாக இருந்தது.

கல்விச்சமூகம் கண்ணீர் வடித்தது.சமூக ஆர்வலர்கள் மர்ம முடிச்சுகளை அவிழ்க்க முடியாது பதைபதைத்த னர்.தேடியலைந்த உறவினர் களைப்படைந்தனர். செம்மணி கொட்டுக்கிணற்றடி பிள்ளையார் மற்றும் நல்லூர் முருகன் கோயில்களிடம் பாரத்தை சுமத்தினர்.

இந்த கொடூரம் நடந்த சில மாதங்களுக்குள்ளே வெளிச்சத்துக்கு வந்தது. கிருசாந்தியின் சகோதரன் பிரணவனுடைய உந்துருளி செம்மணி படையின ரின் பாவனையிலிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. (சகோதரியை தேடிச்சென்ற போது இந்த உந்துருளியில் சென்றார் பிரணவன்) இந்த தகவலை பெற்றுக்கொண்ட கிருசாந்தி உறவினர் ஓய்வு பெற்ற தபால் திணைக்கள உயர் அதிகாரி கோடீஸ்வரன் சட்டத்துறையின் கவனத்துக்கு விவகாரத்தை எடுத்துச்சென்றார்.

இதன் விளைவாக செம்மணி கொடூரம் வெளிச்சத துக்கு வந்தது. முதலாவது குற்றவாளியான இராணுவ கோப்ரல் சோமரத்தின ராஜபக்ச அரச தரப்பு சாட்சியாக மாறி நடந்த உண்மைகளை 1998 ஜ/லை 3ஆம்திகதி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து செம்மணி சதுப்பு நில மூன்று புதைகுழிகளிலிருந்து கிருசாந்தி அவரது தாயார், சகோதரன் மற்றும் உதவியாளரின் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. சடலங்கள் சிதிலமாகி இருந்தாலும் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது கழுத்து நெரிக்கப்பட்டு கயிறினால் சுருக்கிட்ட அடையாளங்கள் காணப்பட்டன. 45 நாட்களின் பெரும் எடுப்பில் செம்மணி வெளியில் மேலும் பல புதைகுழிகள் தோண்டப்பட்டு மனித எச்சங்கள், எலும்பு கூடுகள் மீட்கப்பட்டன.

இவ் வழக்கு ஏழு மாத காலம் நடைபெற்றது. குற்றம் சாட்டப்பட்ட 6 படையினருக்கு மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச, ஜெயசிங்க முதியான்ஸலாகே, பிரிய சாந்த பெரேரா, லான்ஸ் கோப்ரல் தஸநாயக்க, லான்ஸ் கோப்ரல் இந்திரஜித் குமார, பொலிஸ் கான்ஸ்டபிள் பிரதீப்பிரிய தர்சன் ஆகியோரே மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளாவர். இவர்களுள் லான்ஸ் கோப்ரல் இந்திரகுமார என்ற இராணுவ சிப்பாய் தப்பியோடியுள்ளதாக கூறப்பட்டது.

கடத்தல், கற்பழிப்பு, கொலை உட்பட பல்வேறு குற்றங்களில் குற்றவாளிகளாக காணப்பட்ட எதிரிகளுக்கு மரண தண்டனையுடன் பத்து வருடம் வரையான கடூழிய சிறைத்தண்டனை மற்றும் ஐம்பதினாயிரம் ஷரூபா வரையான அபராதம் ஆகிய பல்வேறு தண்டனைகள் தீர்ப்பு வழங்கப்பட்டன. கிருசாந்தி உயர்தர வகுப்பு மாணவி. க.பொ.த சாதாரண தர பரீட சையில் 7பாடங்களில் விசேட சித்தி பெற்றவர். 6வயதில் தந்தையை இழந்தவர்.தந்தை குமாரசாமி சுகாதார திணைக்களத்தில் லிகிதராக கடமையாற்றியவர்.

தாய் இராசம்மா குமாரசாமி (வயது 59) கல்கத்தா பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய துறை பட்டதாரி, கைதடி மகாவித்தியாலய உப அதிபர் மகன் பிரணவன் (வயது 16) யாழ்.சென்.ஜோன் கல்லூரி வகுப்பு மாணவன் .சிதம்பரம் கிருபாமூர்த்தி (வயது 35) ப.நோ.சங்க ஊழியர். இந்த சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கான தீர்ப்பு எழுதப்பட்டாலும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இதற்கான நீதி கிடப்பில் போடப்பட்டுள்ளது. தாமதமாக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி என்பதற்கு இந்த வழக்கு ஒரு உதாரணமாகும். பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் பிரபல சட்டத்தரணி அமரர் குமார் பொன்னம்பலம் பிரசன்னமாகி இந்த வழக்கில் வாதிட்டார்.

இத்தகைய கொடூரங்கள் போர்க்கால இருண்ட நாட்களாக கறுப்பு பக்கங்களாக வரலாற்றில் பதிவாகும்.

1958ஆம் ஆண்டு ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழின படுகொலை 1977,1981,1983 என தொடர்ந தன.இதன் தொடர்ச்சியாக தமிழ் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளும் நடந்தேறின. இந்த கொடூ ரங்களின் சூத்திரதாரிகளாக பலர் அடையாளம் காணப பட்டபோதும் அவர்கள் எவரும் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்படவில்லை.

கிருசாந்தி விவகாரம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளதால் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டனர். இவ்வாறான பல சம்பவங்கள் மூடி மறைக்கப்பட்டாலும் சில சம்பவங்கள் அம்பலத்துக்கு வந்த போதும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

அம்பாறையில் 1997 ஆவணி 21 கோணேஸ்வரி முருகேசம்பிள்ளை (வயது 35) இரண்டு பிள்ளைகளின் தாயார் பொலிஸாரால் கூட்டுப்பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இவரது பெண் உறுப்பில் கிரனைட் குண்டுகளை வீசி காமக்கொடூரரன் கள் தமது வன்மத்தை தீர்த்துக்கொண்டனர். குற்றவாளி கள் தண்டனையில்லாமல் தப்பிக்கொண்டனர்.

சாரதாம்பாள் சரவணபவானந்தகுருக்கள் (வயது 29) 1999மார்கழி 28 புங்குடுதீவு வீட்டிலிருந்து சீருடையின ரால் கடத்தி செல்லப்பட்டு பாலியல் வல்லுறவு செய்யப பட்டு சடலமாக வீசப்பட்டார்.சடலம் வீட்டிலிருந்து 100மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டது. வீட்டுக்கு500மீற்றர தூரத்தில் கடற்படை தளம் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாக மருத்துவ அறிக்கை தெரிவித்துள்ள போதிலும் நீதி நிலை நாட்டப்படவில்லை.

2005 மார்கழி 16 புங்குடுதீவு பகுதியில் தர்சினி இளையதம்பி (வயது 20) கடற் படையினரால் பாலியல் வல்லுறவு செய்து படுகொலை செய்யப்பட்டு பாழடைந்த கிணற்றில் சடலம் வீசப்பட்டிருந்தது. இக் கிணறு கடற் படை முகாமிற்கு அருகிலிருந்தது. பாலியல்பலாத்கார தடயங்கள் உடலில் இருப்பதாக மருத்துவ அறிக்கை தெரிவித்துள்ளது. இவ்வாறு பல சம்பவங்களில் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பி விடுவதால் பாலியல் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து சாதாரண சம்பவங்களாகி விட்டன.

புங்குடுதீவில் இடம்பெற்ற மேலும் ஒரு அவலம் நிறைந்த பாலியல் வல்லுறவு சம்பவம் அங்குள்ள மக்களை அதிர்ச்சி அடைய வைத்தது.2015மே13 வித்தியா சிவலோகநாதன் என்ற மாணவி பாடசாலை விட்டு வீடு திரும்பும் வழியில் காமுகர்களால் வழிமறிக்கப்பட்டு கடத்தப்பட்டார். மறைவான இடமொன்றில் கூட்டு பாலியல் வல்லூறு செய்யப்பட்டு கொடூரமாக கொலை செய்தனர். பாழடைந்த வீட்டில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக ஒன்பது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தடுத்து வைக்கப்பட்ட ஒருவர் நோயினால் இறந்து விட்டார். புங்குடுதீவு வாசியான பூபாலசிங்கம் தவக்குமார் (வயது 37) என்பவரே 2024 ஏப்பிரல் 1 இல் உயிரிழந்தார். இந்த வழக்கில் 7பேர் குற்றவாளிகள் என அடையாளம் கண்டு உயிரிழந்தவர் உட்பட நால்வருக்கு மரணதண்டனையும் முப்பது வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. பாலியல் வல்லுறவுகள் நிறுத்தப்படுவதற்கு கடுமையான தண்டனை அவசியமானது. சட்டத்திலுள்ள ஓட்டைகளை பயன்படுத்தி குற்றவாளிகளை வெளியே நடமாட விட்டால் இவை தொடரும் அன்று தொடக்கம் இன்று வரையும் இந்த அருவருக்கத்தக்க செயல்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

# பொதுச் சின்னம் என்றால் மட்டுமே அம்பாறை, திருமலையில் வெற்றி!

## முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன் நம்பிக்கை

(வி.ரி. சகாதேவராஜா)

“வடக்கு கிழக்கில் பிரச்சினைக்குரிய மாவட்டங்களாக கருதப்படும் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில், பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியின் பொதுச் சின்னத்தில் தேர்தலில் நிற்கின்ற பொழுது மாவட்டங்களின் தமிழ்ப் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும்.”

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பிரதிநிதியும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கவிந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இன்றைய சமகால தேர்தல் சூழல் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்..

அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் இக்கட்டான சூழலில் இருக்கின்றன.

தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்திலும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சங்கு சின்னத்திலும் இணைந்து போட்டியிட வேண்டும் என்ற சிந்தனை இருக்கிறது. அது வரவேற்புக்குமுரியது. இவ் விரண்டு கட்சிகளும் தனித்தனி சின்னத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலு கேட்பதை விட இரண்டு மாவட்டங்களிலும் இரண்டில் ஒரு பொதுவான சின்னத்தில் தேர்தலில் போட்டியிட்டால் இரண்டு மாவட்டங்களிலும் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும். அதேவேளை ஒரு போனஸ் ஆசனம் பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது.

அது வீடாகட்டும் குத்து விளக்காகட்டும் . ஆனால் ஒரு சின்னம் சிறந்தது. அதேவேளை இந்த இரண்டு கூட்டணிக்குள் தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற கட்சிகள் மாத்திரமே இணைக்கப்பட வேண்டும் .

ஏனைய ஈ பி டி பி, டிஎம்பிபி, ஜேவிபி போன்ற கட்சிகள் கேட்பதால் பாதிப்பு இல்லை. நாம் கட்டாக இருந்தால் எம்மை அசைக்க முடியாது.

ஜேவிபிக்கு போடுகின்ற வாக்குகள் ஒரு சிங்களவர் வருவதற்கும் , தொலைபேசிக்கு போடப்படுகின்ற வாக்கு ஒரு முஸ்லிம் வருவதற்கும் வழிசமைக்கும். எனவே இந்த வரலாற்று துரோகத்தை எந்த தமிழரும் செய்யக்கூடாது .

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு இடதுசாரி புதிய அரசாங்கம் வந்திருக்கிறது. அனைவரும் ஓகோ என்று வரவேற்கிறார்கள். ஜேவிபியின் கடந்த கால செயற்பாடுகளை நாம் அறிவோம். இன்று சூரன் தலையை மாற்றி வருவது போல் வேறுஒரு முகத்தோடு தேசிய மக்கள் சக்தியாக வருகிறார்கள் .

எனவே, எந்த விதத்திலும் அவர்களோடு இணைந்து அல்லது அவர்களுக்கு வாக்கு கேட்பது என்பது தமிழர்களுக்கு இழைக்கும் வரலாற்று துரோகமாக பார்க்கப்படும் . எந்த தமிழரும் இதற்கு துணை போகக்கூடாது.

புதிய அரசாங்கம்வந்ததும்சகல மதங்களுக்கும் சம உரிமை என்று சொல்லப்பட்டது. ஆனால் பௌத்த மதத்திற்கு மாத்திரமே அமைச்சு வழங்கப்பட்டிருக்கின்றது .ஏனைய சமயங்களுக்கு அமைச்சு இல்லை. சிங்கள பேரினவாதம் மீண்டும் தலை தூக்கும் ஆபத்து இருக்கின்றது .




புதிய அரசியல் யாப்பு மூலம் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் என்று சொல்கின்றார்கள். முதலிலே 13 வது அரசியலமைப்பு திருத்தத்தை பூரணமாக அமுல்படுத்துங்கள் அதுவே எமக்கு போதுமானது.

எனவே புதிய அரசாங்கத்தின் சுயரூபத்தை இன்னும் ஆறுமாதங்களில் தெரிந்துகொள்ளலாம். அதுவரை பொறுமையாக இருங்கள்.

எது எப்படியோ, இரு மாவட்டங்களிலும் தமிழ் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அதற்காக எந்த விட்டுக்கொடுப்பையும் வழங்க தயாராக இருக்கின்றேன். ஒற்றுமை ஒன்றே எம்மை உயர்த்தும்” என்றும் அவர் தெரிவித்தார்.



# விபத்தில் படுகாயமடைந்த முன்னாள் போராளி மரணம்



யாழ். வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முன்னாள் போராளியான குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு, மாமுனைப் பகுதியைச் சேர்ந்த கடற்புலிகளின் முன்னாள்போராளியான புரட்சிஎன அழைக்கப்படும்நடேசுபரமேஸ்வரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

செம்பியன்பற்றுவடக்குபகுதியில் கடந்த 4ஆம் திகதி இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் யாழ் . போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக் கிழமை அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம்தொடர்பில்மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யானை தாக்கி வான் சாரதி பலி

ஹயஸ் வான் ஒன்றை காட்டு யானை தாக்கியதில் வானின் சாரதி உயிரிழந்துள்ளார்.

பொலனறுவை, கிரித்தல – பக்கமுன பிரதான வீதியில் சோமியேல் பகுதியில் பயணித்த வானே காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

இந்தப் பரிதாபகரமான சம்பவம் இன்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பக்கமுன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலனறுவை, பலுகஸ்தமன – சேவாகம பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய வானின் சாரதியே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிரித்தல – பக்கமுன பிரதான வீதியில் சோமியேல் பகுதியில் காட்டு யானை ஒன்று வீதியைகே கடக்க முற்பட்டபோது அவ்வழியாகப் பயணித்த ஹயஸ் வான் ஒன்று காட்டு யானை மீது மோதியுள்ளது.

பின்னர், இந்தகே காட்டு யானையானது அந்த வானைத் தாக்கியுள்ள நிலையில் வானானது அருகில் உள்ள ஆற்றில் கவிழ்ந்து வீழ்ந்துள்ளது. இதன்போது, வானில் சாரதி மாத்திரமே இருந்துள்ளார் என்றும், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றுலாவுக்குக் சென்ற சிலரை வீட்டில் இறக்கி விட்டு மீண்டும் வீடு நோக்கிப் பயணித்த வானே தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.







## கொழும்பில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசும் போதே டக்ளஸ் தேவானந்தா இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

“கொழும்பிலும் எமது ஆதரவாளர்கள் மற்றும் மக்கள் கொழும்பிலும் போட்டியிடுமாறு கோரிக்கை விடுத்தமையால், இம்முறை கொழும்பிலும் போட்டியிடுகின்றோம். புத்தளம் மக்களும் கேட்டிருக்கின்றார்கள். ஆனால், நேரம் பொருந்தி வராமையால் அதனையிட்டு நாங்கள் இன்னும் தர்மானிக்கவில்லை” என்றும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்பில் சிங்கள வேட்பாளர்களும் போட்டியிடுகின்றார்களா? என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, அதற்கு ஆம் எனப் பதிலளித்த டக்ளஸ் தேவானந்தா, “கொழும்பில் பல இன பல மதங்களைக் கொண்ட மக்கள் இருப்பதால், அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னெடுக்க வேண்டும் என்பதாலும், ஈபிடிபி ஆரம்பகாலம் முதல் சொல்லிவருகின்ற தேசிய நல்லிணக்கத்துக்காகவும், அதனை நாம் செய்கின்றோம்” என்று தெரிவித்தார்’

## தென்னிலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்துள்ளது. வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்தாக நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபிக்கு சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் மலர் மாலை அணிவித்து, மலர் தூபி அஞ்சலி செலுத்தினார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் “சைக்கில்” சின்னத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடவுள்ளது.

நியமனப் பத்திரங்களை கையளித்த பின்னர் கஜேந்திரகுமார் ஊடகவியலாளர்களிடம் பேசும் போது, “கடந்த காலங்களில் தமிழ் தேசியம் பேசி வாக்குகளை பெற்று தமிழ் தேசியத்திற்கு நேர் மாறாக ஒரு பாதையில் சென்ற அரசியலுக்கு இந்த தேர்தல் முற்றுப்புள்ளி வைக்கும்” என்று தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், “தமிழ் தேசிய மக்கள் முன்னணி சொல்லுகின்ற வார்த்தைக்கு நேர்மையாக பயணிக்கின்ற ஒரு அமைப்பு. இந்த தேர்தல் எங்களுடைய இயக்கத்திற்கு ஒரு அமோக வெற்றி கொடுப்பதாக மட்டுமின்றி தமிழ் தேசியத்தின் உறுதியான பயணத்திற்கு மகத்தான ஆணை கொடுக்கின்ற ஒரு தேர்தலாக இதனை நாங்கள் பார்க்கின்றோம்” என்றும் தெரிவித்தார்






# கலாசாலையில் ஆசிரியர் தின விழா

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரியர் மாணவர் மன்றம் நடாத்திய சர்வதேச ஆசிரியர் தினவிழா சனிக்கிழமை காலை கலாசாலையின் ரதி லட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும், பிரதி அதிபரும் இலங்கையின் புகழ்பூத்த பரதநாட்டிய கலைஞருமாகிய கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன் அவர்களுக்கு நூற்றாண்டு கௌரவம் வழங்கப்பட்டதோடு அவரது ஆளுமைச் சிறப்பிதழாக வெளிவந்த கலாசாலையின் கலாதீபம் அக்டோபர் மாத இதழின் சிறப்பு பிரதி கையளிக்கப்பட்டது.

ஆசிரிய மாணவர்கள் வழங்கிய கவியரங்கம் நாடகம், முதலிய சிறப்பு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.






# மாணவர்களுக்கு உளவள செயலமர்வு

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் பயிலும் உயர் வகுப்பு மாணவர்களுக்கான உளவள செயற்பாடு தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் பழைய மாணவரும் சம்மாந்துறை ஆதாரவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான டாக்டர் தர்மலிங்கம் பிரபாசங்கர் தலைமையிலான வைத்திய குழுவினர் அங்கு அந்த பயிற்சியை நடத்தினார்கள்.

வைத்திய அதிகாரிகளான டாக்டர் நௌபல் டாக்டர் கசுன் ஆகியோர் வளவாளராக செயல்பட்டார்கள்.

மாணவர்கள் மத்தியில் பரீட்சை காலத்தில் ஏற்படுகின்ற மன அழுத்தங்கள் மற்றும் உளநெருக்கிடைகள் அவற்றை கையாளுகிற வழிமுறைகள் தொடர்பாக விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவரங்கம்







யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் நினைவரங்கம் கடந்த வெள்ளிக்கிழமை 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது தமிழ் சங்க உபதலைவர் அருட்பணி ஜெரோ செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகள், தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் மாலைகளை அணிவித்தனர் தமிழ் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தொடக்க உரையாற்றினார் தமிழ் சங்க பெருந்தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து மாணவர் உரையிடம் பெற்றது தனிநாயகம் எங்கள் தமிழ் நாயகம் என்ற பொருளில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி குரு மாணவன் ஆண்டனி குமார் அனோஜ் உரையாற்றினார்.

சிறப்பு நிகழ்வாக இலங்கை பல்கலைக்கழக முறைமையில் சேர் பொன் அருணாசலத்தின் வகிபாகம் என்ற பொருளில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா நினைவுப் பேருரை ஆற்றினார். இவருக்கான அறிமுக உரையை தமிழ்ச்சங்க பொதுச் செயலாளர் சந்திரமௌலீசன் லலீசன் மேற்கொண்டார். திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் ஜோன்சன் ராஜ்குமார் கருத்துரை வழங்கினார்

நிகழ்வில் அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகள் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் திருமறைக் கலாமன்ற உறுப்பினர்கள் பாடசாலை மாணவர்கள் குருமாணவர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.10.2024இல் வெளியிடப்பெற்றது.